## III. மகாவங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1963ம் ஆண்டிற்கான மகாவங்கியின் நிதிக்கணக்குகள், பின்னிணைப்பு II அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:—

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய் களில் | சதவீதம் |
| மொத்தக்கேள்விப் பொறுப்புக்கள் .. .. | +135·7 | +12·4 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் .. .. | +111·4 | +14·1 |
| கேள்வி வைப்புக்கள் .. .. .. | + 24·3 | + 8·1 |
| (இதில் வர்த்தக வங்கிகள்) .. .. | + 1·8 | + 1·7 |
| சர்வதேச ஒதுக்குநிதி .. .. .. | − 37·9 | −24·9 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் .. .. | +184·4 | +17·1 |
| அரசாங்கப் பிணைகளும், உத்தரவாதப் பிணைகளும் | +139·5 | +15·8 |

+ ஏற்றம்
− இறக்கம்

மகாவங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர் மாற்று விகிதங்கள், வங்கியின் ஸ்டேர்லிங்—டொலர் விகித மாற்றங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் (பின்னிணைப்பு I—அ-விற் தரப்பட்டபடி) மாற்றப்பட்டன.

மகாவங்கியின் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய் மாற்று விகிதங்களில் இவ்வருடம் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

இவ்விகிதங்களாவன:—

| | தந்தி மாற்றுக் கொள்வனவு | தந்திமாற்று விற்பனவு |
|---|---|---|
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) உடனடி | 1சி. 63/64 பெ. உடனடிக்கு எதிராக | 1சி. 61/32 உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறுமாதங்கள்வரை) | 1/128 பெ. மாதாந்த கழிவு | 1/128 பெ. மாதாந்த அதிகவிலை. |
| இந்திய ரூபாய்கள் (100க்கு) உடனடி | ரூ. 99 3/4 உடனடிக்கு எதிராக | ரூ. 99 13/16 உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறுமாதங்கள்வரை) | ரூபாயில் 1/32 மாதாந்த கழிவு | ரூபாயில் 1/32 மாதாந்த அதிகவிலை |

மகாவங்கியின் அந்நிய செலாவணிகளது கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள், பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 11-ற் காட்டப்பட்டிருக்கின்றன.

அரசாங்கப் பிணைகளுக்கும், வாக்குறுதிப் பத்திரப் பாவிப்பிற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட முற்பணங்களுக்கான (இவை சில குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களினால் எழுந்தவை) மகாவங்கியின் வட்டி விகிதங்கள் வருடத்திற்கு 4 சதவீதமாக மாற்றமின்றி இருந்தன. கூட்டுறவுச் சங்கங்களின் வாக்குறுதிப் பத்திரப் பாவிப்பிற்கு (இது உள்நாட்டில் விளைந்த விவசாயப் பொருட்களின் கொள்வனவு, விற்பனவு அல்லது களஞ்சியத்திடுகையினால் ஏற்பட்டது) எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான மகாவங்கியின் வட்டி விகிதத்திலும் மாற்றமிருக்கவில்லை. இவ்வட்டி விகிதம் வருடத்திற்கு 3 சதவீதமாக இருந்தது. இறைசேரி உண்டியல்களுக்கான மகாவங்கியின் கழிவு விகிதம், கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட சராசரிக் கேள்வி விகிதப்படி தொடர்ந்தும் வருடத்திற்கு $\frac{1}{8}$ சதவீதமாக நிலைத்திருந்தது.

**நாணய வெளியீடு**

புதிய வன்ன அமைப்புடன் கூடிய ரூ. 5, ரூ. 2 ஆகிய இனத்தைச் சேர்ந்த நாணயத்தாள்கள் 1963ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. ரூபா 5 இனத்துத்தாள் புரட்டாதியிலும், ரூபா 2 இனத்துத்தாள் ஐப்பசி யிலும் வெளியிடப்பட்டன.

ரூபா 5 நாணயத்தாளின் முற்பக்கம், பெரும்பாலும் சிவப்பு நிறத்திலும் மண்நிறத்திலும் ஒரு நுணுக்கமான பல நிறப்பட்ட வன்னத்தின் மேல் அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்த வன்னம் நாணயத்தாளின் நடுப்பகுதியிற் காணப்பட்டு அதன் கீட்கரைக்குப் பரந்திருக்கின்றது. காலஞ் சென்ற பிரதமர் கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் படம், இத்தாளின் வலது கைப்பக்க மத்தியிற் காணப்படுகின்றது. இத்தாளின் இடது கைப்பக்க மத்தியில், ''பேரவைச் சிங்கத்தின்'' நீர்ப் பொறியைக் காணக் கூடியதாக இருக்கின்றது. உலோகத்தினுற் செய்த நூல் ஒன்று இத்தாளின் வலது கைப்பக்கத்தில் நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கிறது. இத்தாளின் பிற்பக்கம், மகா பராக்கிரமபாகுவின் உருவச்சிலையைக் கொண்டிருக்கிறது. இச்சிலை தாளின் மத்தியில் சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. தாளின் இருபக்க மத்தியிலும் பல அளவுகளாலான நுண்ணிய எழுத்துக்கள் நிரம்பி இருக்கின்றன.

ரூபா 2 நாணயத்தாளின் முற்பக்கம் பெரும்பாலும் மண் நிறத்தில் ஒரு நுணுக்கமான பலநிறப்பட்ட வன்னத்தின் மேல் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த வன்னம் நாணயத்தாளின் நடுப்பகுதியிற் காணப்பட்டு அதன் கீட் கரைக்குப் பரந்திருக்கிறது. காலஞ் சென்ற பிரதமர் கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் படம், இத்தாளின் வலது கைப்பக்க மத்தியிற் காணப்படுகின்றது. இத்தாளின் இடது கைப்பக்க மத்தியிற் ''பேரவைச் சிங்கத்தின்'' நீர்ப்பொறியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உலோகத் தினுற் செய்த நூல் ஒன்று இத்தாளின் வலது கைப்பக்கத்தில் நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கின்றது. இந் நாணயத்தாளின் பிற்பக்கமும் பெரும்பாலும் மண் நிறத்திலேயே அச்சிடப்பட்டு, மெதிரிகிரியவிலுள்ள வட்டதாகேயின் படத்தைக் கொண்டிருக்கிறது. வலது கைப்பக்க மத்தியில் பல அளவு களாலான நுண்ணிய எழுத்துக்கள் நிரம்பியிருக்கின்றன. இவ்வெழுத்துக்கள் நாணயத்தாளின் மேற்பகுதியிலும் பரந்திருக்கின்றன.

சகல இனங்களையும் சேர்ந்த புதிய அமைப்போடு கூடிய துணை நாணயங் களும் 1963ம் ஆண்டில் வெளியிடப்பட்டன. 50 சதம், 25 சதம், 1 சதம் ஆகிய இனங்களில் ஒவ்வொன்றிலும், முன்னருள்ள நாணயக்குத்திகளை விடப் புதிய நாணயக்குத்திகள் அளவிற் சிறிதாக இருக்கையில், புதிய 10 சதம், 5 சதம், 2 சதம் ஆகிய நாணயக்குத்திகள் முன்னருள்ள அவற்றின் இனத் துடன் ஒத்த அளவினதாக அமைந்திருக்கின்றன. புது நாணயக்குத்திகளில் அவற்றின் முன் பக்கம், இலங்கைப் படைக்கலச் சின்னத்தைக் கொண்டிருக் கின்றது. அந்நாணயக்குத்திகளின் மறுபக்கம், அதன் மத்தியிலே சிங்கள ஓவியக்கலையிலுள்ள ''லியவெல'' நோக்குருவிலிருந்து பெற்ற வன்ன வேலைப் பாடுகளுக்கிடையே நாணயக்குத்தியின் பெறுமானத்தை, எண்களிலும், எழுத்துக்களிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் தாங்கப் பெற்றி ருக்கின்றது. புதிய 50 சத நாணயக்குத்தியும், 25 சத நாணயக்குத்தியும் ''குப்ரோநிக்கலிலும்'' புதிய 2 சத நாணயக்குத்தியும், 1 சத நாணயக் குத்தியும் அலுமினியக் கலப்பு லோகத்திலும் அடிக்கப்பட்டிருக்கின்றன. புதிய 10 சத நாணயக்குத்தியும் 5 சத நாணயக்குத்தியும் இவ்வினங்களைச் சேர்ந்த நாணயக்குத்திகளின் முந்திய அமைப்பைப் போல, அதே நிக்கல்-பித்தளைக் கலப்புலோகத்தில் அடிக்கப்பட்டிருக்கின்றன,

புதிய தாள்களும் நாணயங்களும் முன்னர் வெளியிடப்பட்ட அதே இனத்துத் தாள்களோடும் நாணயங்களோடும் சுற்றேட்டத்தில் இருக்கின்றன. இவை தொடர்ந்தும் சட்டமுறை நாணயமாக இருக்கின்றன.

**வருமானமும் செலவும்**

இவ்வருடத்தில் மகாவங்கியின் வருமானம் ரூபாய் 319,52,225.18 சதமாகும். இதே வருடத்தில் உள்ள செலவுகள் நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 38-ம் பிரிவிலுள்ளபடி நியமிக்கப்பட்ட ரூபா 104,41,108.96 சதம் கொண்ட ஒதுக்குநிதியும் உட்பட ரூபா 199,52,225.18 சதமாக விளங்கின. 1963ம் ஆண்டு, மார்கழி முடிவில் உள்ளபடியான வங்கியின் மொத்த மூலதனக் கணக்குகள், வங்கியின் மொத்த இருப்புச் சொத்துக் களுக்கும், அந்நிய நாணயங்களாக உள்ள இருப்புச் சொத்துக்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையில் 15 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தமையால், வங்கியின் நிகர ஆதாயமான ரூபா 120 இலட்சமும் நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 39(ஆ) பிரிவின்படி மூலதன மிகையில் வரவு வைக்கப்பட்டது. தற்போதுள்ள மூலதன மிகையின் தொகை 520 இலட்சம் ரூபாய் களாகும்.

**வங்கி மேற்பார்வைப் பகுதி**

1963ம் ஆண்டில் வங்கி மேற்பார்வைப் பகுதி ஐந்து வர்த்தக வங்கிகளைப் பரிசோதனை செய்தது.

இப்பகுதி, 1957ம் ஆண்டின் 42-ம் இலக்க ''வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டம்'', வங்கிகளிற் கணக்குகள் திறப்பதோடு தொடர்புள்ள 1961ம் ஆண்டின் 65-ம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் IIIம் பகுதி, ஆகிய இரண்டினையும் முறையே, நடைமுறைக்குக் கொண்டு வருவதும் இயக்குவதும் சம்பந்தமான பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தது.